செ.வெ.எண் : 16 / ஜூன் நாள் : 09.06.2017

**இராமநாதபுரம் மாவட்டம்**

**ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு நடப்பாண்டுக்கான நேர்காணலுக்கு வர இயலாதவர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சேவை மையம் வாயிலாக மின்னணு வாழ்வுச் சான்றிதழ் (DIGITAL LIFE CERTIFICATE) சமர்ப்பித்து ஓய்வூதியத்தினை புதுப்பித்துக் கொள்ளலாம்.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம் மாவட்ட கருவூலம் மற்றும் சார் கருவூலங்கள் மூலம் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு நடப்பாண்டுக்கான நேர்காணல் ஏப்ரல் மாதத்திலிருந்து நடந்து வருகிறது. நேர்காணலுக்கு வரும் ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஓய்வூதிய புத்தகம், ஆதார் அட்டை, குடும்ப ஓய்வூதியதாரர்கள் மறுமணம் / திருமணம் புரியவில்லை என்பதற்கான உறுதிமொழி, ஓய்வூதியர் அடையாள அட்டைக்கான படிவம் (PENSIONERS IDENTITY CARD FORM) ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

நேரில் வர இயலாத ஓய்வூதியர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சேவை மையம் வாயிலாக மின்னணு வாழ்வுச் சான்றிதழ் (DIGITAL LIFE CERTIFICATE) சமர்ப்பித்து ஓய்வூதியத்தினை புதுப்பித்துக் கொள்ளலாம்.

எனவே அனைத்து ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியதாரர்களும் தங்களுடைய ஓய்வூதியத்தினை புதுப்பித்து கொள்ளும் பொருட்டு மேற்கூறிய ஆவணங்களுடன் வருகின்ற 15.07.2017-தேதிக்குள் நேர்காணல் அல்லது வாழ்வுச் சான்றிதழ் அனுப்பாதவர்களுக்கு வருகின்ற ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஓய்வூதியம் நிறுத்தம் செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**